வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை- 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education Northern Province
6th Term Examination, - 2020

FWC

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் - I<br>Christianity Civilization - I | Two Hours<br>Gr. 13 (2020) | 49 T I |

## பகுதி - I

**மிகச்சரியான விடையினைத் தெரிவு செய்து, புள்ளித்தாளில் அதன் இலக்கத்தை இடுக.**

1. கி.மு 3000 ஆண்டுகளுக்கு முன்பே "கலாச்சாரத்தின் தொட்டில்" என வர்ணிக்கப்பட்ட பகுதி
   1. மொசப்பத்தேமியா  2) எகிப்து  3) பாலஸ்தீனா
   4) கிரேக்கம்  5) உரோம்

2. மனிதனை மீட்கக் கூடிய சக்தி தெய்வங்களுக்கேயுரியது என நம்பப்பட்ட நாகரிகம்
   1) உரோமைய நாகரிகம்  2) மொசப்பத்தேமியா நாகரிகம்  3) கிரேக்க நாகரிகம்
   4) பாரசீக நாகரிகம்  5) அசீரிய நாகரிகம்

3. முழு உலகையும் கைப்பற்றி எங்கும் ஒரே மதத்தையும், ஒரே மொழியையும், ஒரே கலாச்சாரத்தையும் நிலைநாட்டுவதை தனது கனவாகக் கொண்டிருந்தவர்
   1) சைரஸ்  2) எத்கிளாத்பலசார்  3) மகா அலெக்சாண்டர்
   4) பொம்பேஜி  5) நேபுகாத்னேசர்

4. பழைய ஏற்பாட்டில் பெரும்பாலான நூல்கள் எழுதப்பட்ட மொழி
   1) அரமேய மொழி  2) எபிரேய மொழி  3) கிரேக்க மொழி
   4) இலத்தீன் மொழி  5) கிபுறு மொழி

5. கிறிஸ்தவ நாகரிகத்தில் உரோமைய நாகரிகம் ஏற்படுத்திய தாக்கங்களுள் பொருத்தமற்றது
   1) மொழி  2) சமூகநிர்வாக முறைகள்  3) கட்டிடக்கலைகள்
   4) வழிபாட்டு முறைகள்  5) மெய்யியல் சிந்தனைகள்

6. சாக்கடலுக்கு கிழக்கே அமைந்துள்ள உயர்ந்த மலைநாடு
   1) இதுமேயா  2) கலிலேயா  3) மோவாவு
   4) யோப்பா  5) சமாரியா

7. யூதேயாப் பகுதியில் அமைந்துள்ள இடங்களில் பொருந்தாது
   1) பெத்சாய்தா  2) பெத்லகேம்  3) பெத்தானியா
   4) எரிக்கோ  5) எருசலேம்

8. கீழ்வரும் கூற்றுக்களில் இஸ்ரயேல் அரசு பிளவுபடுவதற்கான பிரதான காரணங்களுள் தவறானது
   A:- மக்கள் மேல் திணித்த வரிச்சுமை
   B:- அரசன் அந்நிய தெய்வங்களை வழிபட்டமை
   C:- பெத்தெல், தாண் ஆகிய இடங்களில் கோவில்களைக் கட்டியமை
   D:- பாகால் வழிபாட்டில் ஈடுபட்டமை
   E:- மக்கள் மீது திணித்த வரிச்சுமை
   1. ABC  2) ADE  3) ACD  4) ABE  5) BCD

agaram.lk

9. பாலஸ்தீனாவின் தென் பகுதியில் ஏதோம் பாலைவனத்தில் வாழும் மக்கள்
1) சமாரியர் 2) கலிலேயர் 3) மோவாபியர்
4) யூதர் 5) இதுமேயர்

10. எஸ்ரா, நெகேமியா தொடர்பான சரியான கூற்று
1) இவர்களுடைய தலைமையில் இஸ்ரயேலர் சொந்த நாடு திரும்பும் வாய்ப்பு கிட்டவில்லை
2) யூத சமய சமூக கலாசார விருத்திக்குப் பணியாற்றினார்
3) பழைய ஏற்பாட்டை கிரேக்க மொழியில் மொழி பெயர்த்தவர்
4) இவர்கள் காலத்தில் யூதர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டனர்
5) இஸ்ரயேலர் சொந்த நாட்டிற்கு செல்வர் என்று நம்பிக்கையூட்டியவர்

11. இஸ்யேல் வரலாற்றில் சாதோக் தலைமைக் குருவாக நியமிக்கப்பட்டது
1) ஆரோன் காலத்தில் 2) தாவீதின் காலத்தில் 3) சாலமோனின் காலத்தில
4) சவுலின் காலத்தில் 5) சாமுவேலின் காலத்தில்

12. கீழ்வரும் கூற்றுக்களுள் அடிமைகள் தொடர்பான சரியான கூற்றுக்கள்
A:- பெரிய ஏரோதன் காலத்தில் அடிமைகள் தொடர்பான சட்டம் கடுமையாக்கப்பட்டது
B:- மிஸ்னா நூலின் படி அடிமை ஒன்று / இரண்டு செப்புக்காசுகளுக்கு விற்கப்பட்டனர்
C:- போரில் பிடிக்கப்பட்டவர்களும் அடிமையாக்கப்பட்டனர்
D:- இவர்கள் ஆன்மா அற்ற சடப்பொருளாகக் கருதப்பட்டனர்
E:- தால்மூட் நூலின் படி புறவின் அடிமையின் விலை 5 இலிருந்து 10 செப்புக்காசு வரை விற்கப்பட்டது
1) ABD 2) CDE 3) ACD 4) ACE 5) BDE

13. மசொத் என்பதன் பொருள்
1) முதற்கனி 2) ஒப்பிடுதல் 3) புளியாத
4)ஆற்றைக் கடந்தவர்கள் 5) கர்த்தருக்குச் செவி கொடு

14. தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேலர் மட்டுமல்ல உலகில் வாழும் அனைவரும் இறையாட்சிக்குள் அங்கத்துவம் வகிக்கின்றனர் என்பதை விளக்கும் உவமை
1) கடுகுவிதை 2) வலை 3) புளிப்பு மா
4) புதையல் 5) முத்து

15. மொழியினாலே பிரிவுற்ற மக்கள் மொழியினாலே ஒன்றிணைந்ததை விளக்கும் நிகழ்வுகள்
1) பாஸ்கா நிகழ்வு – பெந்தக்கோஸ்தே நிகழ்வு
2) பாஸ்கோ விழா – பாபேல் கோபுர நிகழ்வு
3) பெந்தக்கோஸ்தே விழா – பாபேல் கோபுர நிகழ்வு
4) பிளவுபட்ட நா – சீனாய் உடன்படிக்கை
5) நெருப்புப் போன்ற பிளவுற்ற நாவுகள் - பெந்தக்கோஸ்தே விழா

16. A- கிரேக்க உரோமை முறைக் கல்வியின் கலைக் கூடமாய் விளங்கியது
B- கிரேக்க கலை கலாசாரத்தின் மையமாக விளங்கியது
இக் கூற்றுக்களினால் குறிப்பிடப்படும் இடம்
1) தர்சு 2) ஏதென்ஸ் 3) அலெக்ஸ்சாந்திரியா
4) அந்தியோக்கியா 5) உரோமை

17. கீழைத்தேயத்தில் பரவிய கிறிஸ்தவம் மேலைத்தேயத்தில் பரவிச் செல்ல வாய்ப்பை ஏற்படுத்தியது
1) பவுலின் தூதுரைப் பயணம்
2) அத்தனாசியாரின் நாடுகடத்தல்
3) திருத்தூதர்களின் போதனை
4) பேதுரு கொர்ணேலியுவை மனமாற்றியமை
5) எத்தியோப்பிய அண்ணகன் திருமுழுக்குப் பெற்றமை

agaram.lk

18. கிறிஸ்து தம் மரணத்தின் வழியாக இஸ்ரயேலரையும் புறவினத்தவர்களையும் பிரித்து நின்ற சுவரைத் தகர்த்தெறிந்து அவர்களைத் தம்மோடு இணைத்து ஒன்றுபடுத்தினார். எனப் பவுல் எழுதிய திருமடல்
1) உரோமைய திருமடல் 2) கலாத்திய திருமடல் 3) எபேசிய திருமடல்
4) கொரிந்திய திருமடல் 5) பிலிப்பிய திருமடல்

19. பவுல் கொரிந்திய திருமடலில் குறிப்பிட்ட கருத்துக்களில் பொருத்தமற்றது
1) அன்பின் உன்னத நிலை 2) கிறிஸ்தவ ஒற்றுமை 3) கிறிஸ்தவ சகோதரத்துவம்
4) இயேசுவின் உயிர்ப்பு 5) கிறிஸ்தவ குடும்ப வாழ்வு

20. திருச்சபையில் முதல் நியமனம் பெற்ற பணியாளர்கள்
1) திருத்தூதர்கள் 2) திருத்தொண்டர்கள் 3) மேய்ப்பர்கள்
4) மூப்பர்கள் 5) ஆயர்கள்

21. செப்திமுஸ் செவருஸ், வலேயரின் ஆகியோரின் கலாபனையுடன் தொடர்புடைய சரியான கூற்று
A – குருக்கள் விக்கிரகங்களுக்கு பலியிட வேண்டும்
B – குருக்களும் கிறிஸ்தவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்
C – எவரும் விருத்தசேதனம் செய்வது. திருமுழுக்குப் பெறுவது தடை செய்யப்பட்டது
D – மக்களைக் கிறிஸ்தவத்திற்கோ, யூதமதத்ததிற்கோ மனந்திருப்புவது சட்ட விரோதமாகும்
1) AB - CD 2) BC-AD 3) CD-AB 4) AD-BC 5) ABC-D

22. கிறிஸ்தவ மறையுண்மைகளை விளக்குவதில் பவுல், யோவான் கிரேக்க சிந்தனைகளை அதிகம் பயன்படுத்தியுள்ளனர். இதில் யோவானின் கருத்துக்களில் தவறானது
1) இயேசுவை வார்த்தையாக அறிமுகம் செய்கின்றார்
2) கிறிஸ்துவை உண்மையான ஒளி, உணவு, திராட்சைச் செடி என அழைக்கின்றார்
3) நொஸ்டிக்க கருத்துகளுக்கு ஒத்த இரு உலகு பற்றிய கருத்துக்களைப் பயன்படுத்தியுள்ளார்
4) கிரேக்கப் பண்பாட்டிலிருந்து எடுக்கப்பட்ட இரட்சணியம், ஒப்புரவாதல், பரிகாரம் செய்தல் போன்ற எண்ணக்கருக்களைப் பயன்படுத்தியுள்ளார்
5) ஒளி - இருள், வாழ்வு – சாவு, விண்ணகம் - மண்ணகம் போன்ற ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களைப் பயன்படுத்தியுள்ளார்

agaram.lk

23. அந்தியோக்கிய மறைக்கல்விக் கூடத்துடன் பொருந்தாத கூற்று
1) மனித இயல்புக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்
2) அரிஸ்டோட்டிலின் மெய்யியற் சிந்தனைகளைப் பயன்படுத்தினர்
3) ஒரிஜின், சிறிஸ், டயோனிசியுஸ், அலெக்சாந்திரிய கிளமென்ற் போன்றோர் முக்கிய இறையியற் சிந்தனையாளர்கள்
4) திருவிலியத்தை விளக்க சொல்லுக்குச் சொல் விளக்கும் முறையைப் பின்பற்றினர்
5) இறையியலின் மூவொரு கடவுளின் மூன்று ஆட்கள், கிறிஸ்துவின் தெய்வீக, மனித இயல்புகள் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்

24. திருவிலியத்தை விளக்க சொற்கருத்து முறை, உளவியல் முறை, ஆன்மீக முறை என்ற நுட்ப முறைகளைக் காணக்கூடிய நூல்
1) பிரமாணங்கள் 2) அப்பலோஜியா 3) பேதக மறுப்பு
4) கிறிஸ்து வேத ஆதாரம் 5) ஆறுவரிசையில் வேதாகமம்

25. மசதோனிய வாதத்துடன் தொடர்புடைய சரியான கூற்றாவது
1) வார்த்தை கடவுளிலும் கீழானவர்
2) தூய ஆவி கடவுலல்ல
3) இயேசு கடவுள், மனிதன் என இரண்டு ஆட்களாக இருக்கின்றார்
4) மகன் தந்தைக்கு சமனானவர் அல்ல
5) கிறிஸ்துவின் மனித சுபாவம் தெய்வ சுபாவத்தில் மறைந்து விட்டது

26. தொடகத்தில் வாழ்ந்த துறவிகள் --------------- ஆகிய நெறிகளை கடைப்பிடித்தனர்
   1) ஏழ்மை, தியாகம், நோன்பு
   2) உடல் உழைப்பு, செபம், நோன்பு
   3) கீழ்படிதல், ஏழ்மை, கற்பு
   4) செபம், நோன்பு, கற்பு
   5) கீழ்ப்படிவு, செபம், நோன்பு

27. தூய பொனிபாஸின் தலைமைத்துவத்தின் கீழ் ---------- இடைவெளிக்குப் பொருத்தமானது
   1) அயர்லாந்து முழுவதும் கிறிஸ்தவ நாடாக மாறியது
   2) ஸ்கொட்லாந்து முழுவதும் கிறிஸ்தவ நாடாக மாறியது
   3) கிறிஸ்தவ இராச்சியமொன்று உருவாகியது
   4) சுதேச குருக்களின் உருவாக்கம் ஆரம்பமானது
   5) எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் முழு ஐரோப்பாவும் கிறிஸ்தவ நாடானது

28. திருச்சபையின் வரலாற்றிலே கிழக்கு மேற்கு சபைகளுக்கிடையே பிளவு ஏற்பட்டது
   1) கி.பி 1020   2) கி.பி 910   3) கி.பி 1054   4) கி.பி 1025   5) கி.பி 1189

29. மூன்றாம் சிலுவைப் போருடன் தொடர்பானது
   1) இப்போரில் மன்னன் கலந்து கொள்ளவில்லை
   2) இப்போர் முழுத்தோல்வியில் முடிந்தது
   3) இப்போரில் பல படைவீரர்கள் தொற்று நோயால் மடிந்தனர்
   4) திருப்பணிகள் திருநாட்டினைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டனர்
   5) நைல்நதியின் அருகாமையிலுள்ள தாமித்தா நகரம் பிடிபட்டது

30. ஏழையின் கிளாரா, தவத்தின் சகோதரிகள் என்ற சபைகள் மூலம் சேவையாற்றியவர்கள்
   1) வல்தேசியன் சபையினர்   2) சிஸ்ரேசியன் சபையினர்
   3) பிரான்சிஸ்கன் சபையினர்   4) குளுனி சபையினர்
   5) டொமினிக்கன் சபையினர்

31. முறைமைவாதிகள் என அழைக்கப்பட்டவர்கள்
   1) மெதடிஸ்தர்கள்   2) பப்ரிஸ்ட் சபையினர்   3) அங்கிலிக்கன் சபையினர்
   4) இரட்சணிய சேனையினர்   5) லூதரன் சபையினர்

32. மாற்று சீர்திருத்தம் என்பது
   1) மறுமலர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட சீரழிவுகளை மறுசீரமைத்தலாகும்
   2) சீர்திருத்த சபையினரின் போதனையால் பிரிந்து சென்றவர்களை ஒன்றுபடுத்தலாகும்
   3) 16ம் நூற்றாண்டில் தோன்றிய புரட்டஸ்தாந்து திருச்சபைக்குள் மற்றவர்களை ஏற்படுத்தல்
   4) புதிய மறுமலர்ச்சி சபைகளை உருவாக்கி சீர்திருத்தங்களை ஏற்படுத்துதலாகும்
   5) திரிதெந்தின் சங்கத்தின் மூலம் சீர்திருத்தத்தை ஏற்படுத்துதலாகும்

33. கப்புச்சின் சபையுடன் பொருந்தாத கூற்றாவது
   1) இச்சபைக்கு தலைமை தாங்கியவர் மத்தேயோ செரபீனி டீ பாஷ்சி ஆவார்
   2) இச்சபை பிரான்கிஸ்கன் சபையிலிருந்து தோன்றியதாகும்
   3) திருத்தந்தை 7ம் கிளமென்ற் எங்கும் சென்று மறைபோதகம் செய்ய அனுமதித்தார்
   4) 1452 இல் பெண்களுக்கென்று இரண்டாம் சபை ஆரம்பிக்கப்பட்டது
   5) திருத்தந்தை 3ம் பவுலினால் இச்சபை அங்கீகரிக்கப்பட்டது

34. பங்குப் பாடசாலைகளின் தரம் உயர்வடையக் காரணமானவர்கள்
   1) பெரிய சாள்ஸ், கசியோடோறஸ்
   2) அலகுயின், எயின்கார்ட்
   3) அகுஸ்தினார், பெரிய சாள்ஸ்
   4) பற்றிக், பொனிபாஸ்
   5) அலெக்ஸ்சாந்தர், பொனவென்சர்

agaram.lk

35. திருச்சபையின் இருபெரும் தூண்கள் என வர்ணிக்கப்பட்டவர்கள்
1) அகுஸ்தினார், தோமஸ். அக்குவினார்
2) மாட்டின் லூாதர், ஜோன் கல்வின்
3) தூய பெனடிற், தூய பத்திரிசியார்
4) பிலிப்பு, ஸ்தேவான்
5) தூய பேதுரு, தூய பவுல்

36. நற்கருணை கிறிஸ்துவின் மீட்புச் செயலை நினைவு கூருவதோடு விசுவாசத்துடன் அப்பமும் இரசமும் பருகுபவர்களுக்கு ஆசீர்வாதமும் கிடைக்கும் என்ற கருத்தையுடையவர்
1) லூதர் 2) கல்வின் 3) சுவிங்ளி
4) முன்ற்சர் 5) கென்றி

37. திருவிலியத்தில் உள்ளவற்றை விஞ்ஞானத் தரவுகளூடாக ஆய்வு செய்து நூல்களை வெளியிட்டவர்
1) சேர் ஐசாக் நியூட்டன் 2) அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல்
3) அல்பேர்ட் ஜன்ஸ்டயின் 4) அலெக்ஸ்சாண்டர் பிளமிங்
5) இவிளின் காணி அம்மையார்

38. தோமஸ் அக்குவினாசின் நற்கருணைப் பாடல்களுள் பொருந்தாததை இனங்காண்க
1) லவுடா சியோன் 2) பாஞ்சே லிங்குவா 3) வேர்பும் சுப்பேர்னும்
4) ஆஞ்ரூஸ்டேயி 5) சாக்றிங் சொலெம்னியஸ்

39. தூய அவிலா திரேசா தனது ஆன்ம குருவின் ஆலோசனையின் பேரில் எழுதிய நூல்
1) ஆன்மாவின் கோட்டை 2) சீர்பெற்ற வாழ்வுக்கு வழி 3) வேர்பும் சுப்பேர்னும்
4) ஆஞ்ரூஸ் டேயி 5) சாக்றிங் சொலெம்னியஸ்

40. ஆலய வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் இசைக்கு கட்டுப்பாடுகள், விதிகளை முன்வைத்தவர்
1) திருத்தந்தை 10ம் பத்திநாதர் 2) திருத்தந்தை 12ம் பத்திநாதர்
3) திருத்தந்தை 6ம் பவுல் 4) திருத்தந்தை 23ம் யோவான்
5) திருத்தந்தை 13ம் லியோ

agaram.lk

41. பிரான்சின் சாள்ஸ் அரசரின் தலைநகரம் கொன்ஸ்தாந்திநோபிளுக்கு மாற்றப்பட்ட போது மைக்கல் ஆஞ்சலோவால் செதுக்கப்பட்ட சிற்பம்
1) மோசேயின் சிற்பம் 2) பியற்றா 3) தியானத்தின் புனித திரேசா
4) கதிரை மாதா 5) தாவீதின் உருவச்சிலை

42. இந்தியாவில் தோன்றிய இலத்தீன் திருச்சபையின் வழிபாட்டு முறையானது -------------- இடைவெளிக்குப் பொருத்தமானது
1) கீழைத்தேய மரபு முறைகளைச் சார்ந்தது
2) நெஸ்தோரிய கிறிஸ்தவ மரபு முறையைச் சார்ந்தது
3) பேர்சிய மரபு முறையைச் சார்ந்தது
4) கிழக்கு சீரிய மரபு முறையைச் சார்ந்தது
5) மேலைத்தேய மரபு முறைகளைச் சார்ந்தது

43. மத்தேயு ரிச்சி அடிகளாருடன் பொருந்தாத கூற்றை இனங்காண்க
A - இத்தாலியைச் சேர்ந்த இயேசு சபைக்குரு
B – சீன பண்பாட்டை, கலாசாரத்தை மதிக்கும் ஒருவர்
C – நாகசாக்கி நகரத்தை தம் பணித்தளத்தின் மையமாகக் கொண்டவர்
D – சீனரின் புராதன கதைகளைப் பயன்படுத்தி விலிலியத்திலுள்ள படைப்புப் கதைகளுக்கு விளக்கம் கொடுத்தவர்
E – சீன தத்துவஞானியின் தத்துவங்களைப் பயன்படுத்தியவர்
1) A 2) B 3) C 4) D 5) E

44. ஒல்லாந்தரின் அடிப்படைக் கொள்கையானது
1) குறைந்த செலவில் சிறந்த கல்வி
2) தோம்புப் பதிவுகளை மேற்கொள்ளுதல்
3) மறையைப் பிரச்சாரப்படுத்தும் அடித்தளம் பள்ளிக்கூடம்
4) கல்விக்கு மேற்பார்வை முறையே சிறந்த ஊடகம்
5) கல்வியே மறையின் அடிப்படை ஆதாரம்

45. யாழ்ப்பாணத்தில் பாதுகாவலன் என்ற பத்திரிகையை ஆரம்பித்து வைத்தார்
1) மர்பி 2) ஜேம்ஸ் மாட்டின் 3) யுவாம்
4) சுவாமிஞானப்பிரகாசர் 5) ஆயர் பொன்ஜின்

46. இன்றைய உலகில் திருச்சபையின் இரண்டாம் பகுதியில் குறிப்பிடப்படும் கருத்துக்களில் பொருத்தமற்றது
1) குடும்பமும் மனிதப் பண்பாடும்
2) மனிதப்பண்பாடும், சமூகப் பொருளாதாரமும்
3) உலக அமைதியும், அரசியலும்
4) குடும்பமும், சமாதானமும்
5) மனிதமாண்பும், பண்பாடும்

47. நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவம் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்தேன் எனும் இயேசுவின் விருதுவாக்கை அடிப்படையாகக் கொண்டது
1) சமூகப்பணி ஆசிய ஆயர்கள் அமைப்பு
2) திருச்சபைகளின் கூட்டமைப்பு
3) உலக கிறிஸ்தவ சம்மேளனம்
4) ஆசிய ஆயர்கள் மன்றம்
5) ஆசிய கிறிஸ்தவ சம்மேளனம்

agaram.lk

48. உலக கிறிஸ்தவ சம்மேளனத்தின் பத்தாவது கூட்டத்தொடரானது தென்கொரியாவின்------------------- இடத்தில் நடைபெற்றது. இடைவெளிக்குப் பொருத்தமானது
1) உப்சலா 2) வன்கூர் 3) பூசான்
4) நைரேபி 5) கன்பரா

49. கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய சுற்றுமடல் உரோமைக் கத்தோலிக்க திருச்சபையால் வெளியிடப்பட்டது
1) 1949 2) 1950 3) 1965 4) 1974 5) 1945

50. பல்சமய உறவு பற்றிய படிப்பினைகளைக் குறிப்பிடும் சங்க ஏடுகளில் பொருந்தாதை இனங்காண்க
A - திருச்சபை என்ற கோட்பாட்டு விளக்கம்
B - சமயச் சுதந்திரம் பற்றிய அறிக்கை
C - கிறிஸ்தவ மல்லா மறைகளோடு திருச்சபைக்குள்ள உறவு என்ற விதித்தொகுப்பு
D - திருச்சபையின் நற்செய்திப் பணி பற்றிய விதித்தொகுப்பு
E - இன்றைய உலகில் திருச்சபை என்ற கொள்கை விளக்கம்
1) A 2) B 3) C 4) D 5) E

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை- 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education Northern Province
6th Term Examination, - 2020

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் - II<br>Christianity Civilization - II | Two Hours<br>Gr. 13 (2020) | 49 | T | II |

**பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி - I

1.

(i) கிறிஸ்தவ நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கிரேக்க நாகரிகத்தின் உட்கூறுகள் நான்கு தருக?

(ii) வடஅரசின் இயல்புநிலை பற்றி நான்கு கருத்துக்கள் தருக?

(iii) வரி தண்டுவோர் பற்றி திருவிவிலியத்தில் எடுத்துக் கூறப்படுகின்ற விடயங்கள் நான்கு தருக?

(iv) இயேசுவின் இறையரசு அறிவிப்பை மத்தேயு நற்செய்தி நூலில் இருந்து நான்கு அறிவுரைகளைத் தருக?

(v) இயேசுவின் மரணம் பற்றிய யோவானின் சிறப்புக் கருத்துக்கள் நான்கு தருக?

agaram.lk

2.

(i) பவுலின் 2ம் மறைத்தூதுப் பயணங்களில் பிலிப்பியில் நடைபெற்ற நிகழ்வுகள் நான்கு தருக?

(ii) பவுல் கிறிஸ்தவ ஒற்றுமை குறித்து எபேசியருக்கு கொடுத்த அறிவுரைகள் நான்கு தருக?

(iii) திருச்சபையின் ஆரம்பத்தில் கிறிஸ்தவ நம்பிக்கைகளுக்கு எதிராகத் தோன்றிய தப்பறைகள் நான்கைப் பெயரிடுக?

(iv) 11ம் நூற்றாண்டின் ஏற்பட்ட பிளவினால் கிறிஸ்தவ கலாசாரத்தில் ஏற்பட்ட தாக்கங்கள் நான்கு தருக?

(v) திருச்சபையின் சீர்திருத்தத்தின் சமூக, அரசியல், பொருளாதாரப் பின்னணிகள் நான்கு தருக?

3.

(i) உரோமனெக்ஸ் கட்டிடக் கலையின் சிறப்பம்சங்கள் நான்கு தருக?

(ii) இலங்கை மக்களின் கலாசாரத்தில் ஒல்லாந்தர் ஏற்படுத்திய தாக்கங்கள் நான்கைத் தருக?

(iii) கத்தோலிக்க கல்வி நிறுவனங்களைக் கண்காணிக்க வந்த ஆண், பெண் துறவற சபைகள் நான்கைத் தனித்தனியே பெயரிடுக?

(iv) இன்றைய உலகில் திருச்சபை என்ற கொள்கைத்திரட்டில் மனித மாண்பு பற்றி வலியுறுத்தப்படும் கருத்துக்கள் நான்கைக் குறிப்பிடுக?

(v) கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான காரணங்கள் நான்கை திருவிவிலிய அடிப்படையில் தருக?

## பகுதி II

4.

(i) ஆதித் திருச்சபையின் பண்புகள் ஐந்தைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைப் பற்றி விபரிக்குக?

(ii) ஆதித் திருச்சபையின் வாழ்வில் காணப்பட்ட அன்பியற்கட்டமைப்பை இன்றைய திருச்சபையில் கட்டியெழுப்ப திருச்சபை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை விபரிக்குக?

5.

(i) பல்வேறு தியாகங்களைக் கேட்டு நிற்கும் இறையரசின் அங்கத்துவத்தினை புதையல், முத்து உவமைகளினூடாக இயேசு எவ்வாறு விளக்குகின்றார்?

(ii) இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்த புதுமையினூடாக நீர் விளக்கிக் கொள்வது யாவை எனக்குறிப்பிட்டு விளக்குக?

6.

(i) மத்திய யுகத்தில் திருச்சபையில் ஏற்பட்ட சீரமைப்பு கத்தோலிக்க திருச்சபையில் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு எவ்வாறு காரணமாயிருந்தது என ஆராய்க?

(ii) திருச்சபையின் புதிப்பித்தலுக்கு துறவற சபைகள் எத்தகைய பங்களிப்பு ஆற்றியது என்பதை விபரிக்குக?

7.

(i) இயேசுவின் காலத்து யூத சமூக மரபுகளை குறிப்பிட்டு அவற்றுள் இரண்டைப் பற்றி விபரிக்குக?

(ii) எமது சமூகத்திலும் சில சமூக அடிப்படைவாதங்கள் மக்களிடையே ஏற்றத்தாழ்வு நிலைகளை உருவாக்கியுள்ளன, கிறிஸ்தவ மாணவராகிய நீர் சமத்துவ சமூதாயத்தை உருவாக்க இயேசுவின் வழிமுறைகளை எவ்வாறு கையாள்வீர் என விளக்குக?

8.

(i) 16ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மறைபரப்பாளர்களின் வருகையினால் இலங்கையினுடைய கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றங்களை விபரிக்குக?

(ii) அருகி வரும் கிறிஸ்தவ கலைகளான இசை, ஓவியம், நாடகம், இலக்கியம் ஆகிய கலைகளை பாடசாலையிலும், சமூகத்திலும் வளர்ச்சியடையச் செய்வதில் உமது பங்களிப்புக்கள் எவை என்பதை விபரிக்குக?

agaram.lk